Registered No. M. 2830

"SIDDHANTHAM"

Vol. 41 — No. 10

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 41	கீலக கார்த்திகை 1968 நவம்பர்	இதழ்

உள்ளுறை பக்கம்

திருவாசகம்—சிலயாப்பிலக்கணக் குறிப்புக்கள்	...	313
சைவந்தழுவிய சான்றோன்	...	318
நரியும் பரியும்	...	323
அடி முடி அளப்பொணுத் தெய்வம்	...	331
எறும்புகளின் சமாதி நிலை	...	334
கடவுள் அருள் சக்தி	...	335
தாய்ச் சமயம் சாரல்	...	337
பிற செய்திகள்	...	341

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,

துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாதமுதலி தெருவிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 17-11-68 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக்கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, ஆண்டு விழா, பிற இன்றியமையாச் செய்திகள்பற்றி முடிவெடுக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(செயலாளர்)

சமாஜத் தேர்வு

நம் சமாஜத்தாரால் நடத்தப்பெறும் இளஞ்சைவப் புலவர், சைவப் புலவர் தேர்வுகள் 23-11-68, 24-11-68 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 to மணி 1, மாலை 2 to 5 மணிகளில் திருச்சிற்றம்பலம், சென்னை, நாகர்கோயில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலியவிடங்களில் நிகழும். தேர்வுக்கு வருவோருக்குத் தனியாக அஞ்சல்மூலம் அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம் சமாஜச் சார்பில் 20-10-68 ஞாயிறு மாலையில் மெய்கண்டார் விழா கொண்டாடப்பெற்றது. அவ்வமயம் சென்னை திருமயிலைக் கபாலீச்சுரத்தில் கழகப் புலவர் சித்தாந்த வித்தகர் திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கள் 'மெய்கண்டார்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் 22-10-68 காலையில் சைவசந்தான குரவர்களுக்குத் திருமுழுக்காற்றித் திருமுறை வழிபாடும் நிகழ்ந்தது. அன்று மாலை காஞ்சி குமார கோட்டத்தில் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் "மெய்கண்ட சிவாசாரியார்" புராணம் பற்றி விரிவுரையாற்றினார்கள்.

அம்பா சமுத்திரத்தில் 9-10-68 முதல் 16-10-68 முடிய காசிநாத சுவாமி வகையறாதேவஸ்தானங்கள் சார்பில் திருமுறை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41	கீலக ஹூ கார்த்திகை 1968 நவம்பர்	இதழ் 11

திருவாசகம்-சிலயாப்பிலக்கணக் குறிப்புக்கள்

(ஆசிரியர்)

திருவாசகம் சுத்தப் பதிப்பு சமாஜ வெளியீடாக விரைவில் வெளிவர இருப்பதுபற்றி ஜூலை மாத இதழில் குறிப்பிட்டிருந்தோம்: அதனுள் வெளியாக இருக்கும் திருத்தமான பாடல்களைப்பற்றிய விளக்கமும் அங்கே தரப்பட்டுள்ளது.

இனி, திருவாசகத்தில் காணப்படும் யாப்புப் பற்றிய சில குறிப்புகளைப் பின்னே தருகிறோம். இவை சைவ மெய்யன்பர்களுடைய ஆராய்ச்சிக்கு உரியன.

எதுகை: பொதுவாக, திருவாசகம் முழுமையிலும் எதுகையில் பிறழ்வை எங்கும் காண முடியாது. சிவ புராணம் முழுமையும் கலிவெண்பா. ஆதலினாலே, இரண்டு அடிகள் ஓர் எதுகையாக நூல் தொடர்ந்து அமைந்துள்ளது. இதனை அடுத்து உள்ள மூன்றும் அக வற்பாக்கள். இங்கு பெரும்பான்மையும் எதுகை அமைய வேண்டும் என்ற நியதி இல்லாதிருந்தும்கூட, பல அடிகள் இரண்டடி ஓர் எதுகையில் அமைந்திருக்கக் காணலாம். சில இடங்களில் இவ்வமைப்பில் மாறுதலும் இருக்கிறது. இது யாப்பிலக்கணத்தில் வழுவியதாகாது.

பிற பதிகங்களில் ஓரிடத்தில் மட்டும் எதுகை பொருத்தமில்லாமல் உள்ளது. திருத்தசாங்கம் எட்டாம் பாடல் காண்க:

இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய்—அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை.

மூன்றும் அடியின் முதலிலுள்ள "பிறவிப்பகை என்ற தொடருக்கு எதுகையாக நான்காம் வரித் தொடக்கத்தில் 'பருமிக்க' என்று வந்துள்ளது. வல்லின றகரத்துக்கு இடையின ரகரம் எதுகையில் வருவதற்கு இலக்கிய ஆட்சி இல்லை என்ற அவ்வளவே இங்குக் குறிப்பிடத் தக்கது. தசாங்கத்தில் பிற பாடல்கள் நேரிசை வெண்பாவில் அமைந்துள்ளன: இவ்வொரு வெண்பா மட்டும் அவ்வாறின்றி, இன்னிசை வெண்பா என்று கொள்ள இடமுண்டு:

இனி சீர்கள் மிகப்பல இடங்களில் மிகுந்தும், குறைந்தும் வருவது குறிப்பிடத் தக்கது. நச்சினார்க்கினியர் திருக்கோத்தும்பி இரண்டாம்பாடலில் முதல் வரியை நாற்சீரின் மிகுந்து ஐஞ்சீரால் வருவதற்கு உதாரணமாக எடுத்துக் காட்டி இருக்கிறார்.

நான்ஆர்என் உள்ளம்ஆர் ஞானங்கள் ஆர்என்னை யார்
[அறிவார்
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

இக்கலிப்பாவுள் முதல் அடியானது நானார் என், உள்ளமார், ஞானங்கள், ஆர் என்னை, யார் அறிவார் என்று ஐஞ்சீராகப் பிரித்தற்குரியது. இவ்வாறு கலிப்பாவினுள் வருவதற்கு இலக்கணம் இல்லை. இவ்விதமே திருவாசகத்துள் பின்னும் பல இடங்களில் சீர்கள் மிக்கும், குறைந்தும் காணப்படுகின்றன.

முதலாவதாக கோயில் மூத்த திருப்பதிகம், "உடையாள் உன் றன் நடுவிருக்கும்" என் ற முதல் பாடல்.

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தாணுல் அடியேனுன்

அடியார் நடுவுள் இருக்கும்அரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே.

இப்பாடல் மேற்குறித்தவாறு சீர்பிரித்தற்குரியது, இங்கு பாடலானது அறுசீர் விருத்தமாக அமைந்துள்ளது. அச்சிடும் சௌகரியத்திற்காக அறுசீர்களை மும்மூன்ருக இரண்டு வரியில் எழுதுகிரும். இதனுள் மூன்ரும் அடியை மேலே கண்டவாறு அறசீராகப் பிரிப்பதிலுள்ள இடர்ப்பாட்டைக் கருதி, காரைக்குடி ராய சொக்கலிங்கனார் அவர்கள் இவ்வடியைப்பின்வருமாறு திருத்தி அச்சிட்டிருக்கிறார்கள்.

அடியார் நடுவுள் ளேஇருக்கும்
அருளைப் புரிபொன் னம்பலத்தெம்

எந்த ஏட்டிலும் இவ்விதப் பாடம் இல்லை. மாணிக்க வாசகருடைய வாக்கை ஏடுகளில் கிடைத்துள்ளபடியே நாமும் போற்றவேண்டுமேயன்றி திருத்தக்கூடாது என்று சைவ மக்கள் எண்ணுவர். அன்றியும், இதுவரையில் உள்ள பாடம் உள்ளபடியே சீர் பிரிப்பதற்கு ஓரளவு இடம் கொடுக்கிறது. சொற்களைச் சிதைத்துப் பிரிக்க வேண்டியிருக்கிறது என்பது ஒன்றுதான் குறை. அன்றி, தலைப்பில் நாம் பிரித்துக் காட்டியதிலும் ஒரு குறை உண்டு. 'இருக்குமரு—ளைப் புரி—யாய்பொன்' என்று சீர்கள் பிரிகின்றன. இவ்விருத்தத்தில் சீர்கள் 'மா-மா-காய்—மா மா-காய் என வரும்போது, இங்கு மட்டும் 'மா-மா—காய்-விளம்-மா—காய்' என வருவது பொருந்தாமலுள்ளது.

ஆனால் நான்காம் பாடல் இவ்வாறு சீர் பிரித்தற்கு இடம் தரவில்லை. இதன் முதல் இரு அடிகளும் பின் வருவன :

முழுமுத லேஐம் புலனுக்கும்
மூவர்க்கும் என்தனக்கும்
வழிமுத லேநின் பழவடி
யார்திரள் வான்குழுமி

இங்கு அறுசீராகப் பிரிக்க வழியில்லை; கட்டளைக் கலித்துறையாக்க இடமுண்டு.

இப்பதிகப் பாடல்களில் ஒவ்வோர் அடியும் மா—மா—காய்—என்ற வாய்பாட்டை உடையன. பொதுவாக ஒன்பது பாடல்களுக்கும் இந்த யாப்பமைதி பொருந்துகின்றது. ஆனால் மேற்காட்டிய நான்காம் பாடலுக்கு மட்டும் பொருந்தவில்லை. இதை உள்ளபடியே நாம் வைத்திருக்க வேண்டியவர்களேயன்றி ஏட்டில் பொருத்தமான பாடம் காணாதவரை, நாமாகத் திருத்துவது முறையாகாது.

அடுத்து அடைக்கலப்பத்துப் பதிகம் முழுமையும் காணத் தக்கது. இதன் தலைப்பு கலவைப்பாட்டு என்று குறிப்பிடுகின்றது இதனுள் பத்துப் பாடல்களும் ஒரே யாப்பமைதியைக் கொண்டிருக்கவில்லை. அதனால் போலும் இந்தத் தலைப்பு. பெரும்பான்மையான பாடல்கள் கட்டளைக் கலித்துறை இலக்கணம் பொருந்தியிருக்கின்றன. எனினும் சிலபாடல்களில் சிலவரிகள் இவ்விலக்கணம் பொருந்தி வரவில்லை, இதை யாப்பு என்ற கண்கொண்டு நோக்குவோர் யாரும் காணலாம். எனவே இதை முயன்று சிலர் எண்ணுகின்றபடி கட்டளைக் கலித்துறைக்குப் பொருந்துமாறு சில எழுத்துக்களைப் பெய்யவும் திருத்தவும் நீக்கவும் முயல்வது பொருத்தமற்றது.

இனிக் காணத் தக்கது ஆசைப்பத்து. இது அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் என்ற தலைப்பு உடையது. இது முதல் ஐந்து சீர்களும் மாச்சீர் ஆகவும் இறுதிச்சீர் காயச்சீர் ஆகவும் பெரும்பான்மை வருவது. சிறுபான்மை

இவ்வாறு அமையவில்லை. இரண்டாம் பாடல் முதலடி பின்வருவது :

மொய்ப்பால் நரம்பு கயிறுஆக
மூளை என்பு தோல்போர்த்த
குப்பாயம் புக்கு இருக்ககில்லேன்
கூவிக் கொள்ளாய் கோவேயோ.

இங்கு இவ்விரண்டு அடிகளும் மா-மா-காய் மா-மா-காய் என்ற அமைதியோடு வருகின்றன. ஆனால் மூன்றும் வரி இவ்விருவகை இலக்கணங்களுக்கும் பொருந்தவில்லை. மா-மா-காய் மா-காய் என்று உள்ளது. இவ்வாறே இப்பதிகத்தில் முதல் பாட்டு நான்கு ஐந்து முதலான பாடல்களும் அமைந்துள்ளன. இங்கு இவை அறுசீர் விருத்தங்கள் என்று சொல்லலாமே யன்றி, பத்துப்பாடல்களும் ஒரே இலக்கணம் பொருந்தவுமில்லை, ஒரு பாடலின் நான்கு வரிகளும் ஒரே இலக்கணம் பொருந்தவுமில்லை.

புணர்ச்சிப் பத்தின் எட்டாம் பாடல் மூன்றும் அடியும் இவ்வாறே பிறவற்றோடு ஒவ்வாமல் நிற்கிறது.

எண்ணப்பதிகம் முழுமையும் இவ்விதம் யாப்பமைதி பெறாமல் உள்ளது; தலைப்பு 'எழுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்' என்று சொன்ன போதிலும், பல அடிகள் இவ்விலக்கணத்திற்குப் பொருந்தாமல் உள்ளன. மூன்றும் பாடல் இறுதிவரை அறுசீராகவே உள்ளது.

நன்பே அருளாய் என்னுயிர்
நாதா நின்னருள் நாணுமே

இதுபோல்வன பின்னும் பல.

இவற்றை ஆராய்ச்சியாளர் நன்கு சிந்திக்கவேண்டும். யாம் பன்னிரு ஏடுகளுக்குமேல் பரிசோதித்திருக்கிறோம். பாடல்களின் யாப்பமைதி எல்லாவற்றிலும் ஒன்றுபோல் இருக்கிறதேயன்றி வேறுபாடில்லை. மாணிக்கவாசகர் காலத்தில் விருத்தப்பாக்கள் மிகவும் செம்மை பெற்றுத் தான் இருந்தன. இதை அவருடைய பிற பாடல்கள்

எங்கும் நன்கு காண முடிகிறது. எனவே, பாடல்களை யாப்புக்காக நாமாகத் திருத்துவதென்பது முறையாகாது, மாணிக்கவாசகர் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளை அவ்வப்போது செய்யுளாகப் பாடினர். யாப்புக்காக அவர் காத்திருக்கவில்லை. சில சமயம் கடைந்தெடுத்த மணி போல இலக்கணம் பொருந்திக் காணப்படுகின்றது. சில சமயம் உணர்ச்சி வசமாய் நிற்பதனல் ஒவ்வொரு பாடல் வெவ்வேறு உணர்ச்சியோடு வெளிவருகின்றது. அடிக்கடி மாறுபடுவதைக்கூட இவ்வுணர்ச்சி மாற்றத்தால் ஏற்படும் வேறுபாடு என்று நாம் கொள்ளவேண்டுமேயன்றி, யாப்பிலக்கணத்திற்கு மட்டும் பொருந்த வேண்டும் என்று எதிர்பார்ப்பது திருவாசகத்திற்குப் பொருந்தாது.

சைவந் தழுவிய சான்றேன்

(கா. சிவகாமியம்மையார், எம். ஏ , உதகை)

சைவந்தழுவிய சான்றேர்களால் சிவ வழிபாட்டிற்குரிய நெறிகள் கூறப்படுகின்றன. "சிவ வழிபாட்டிற்கு உரிய பூக்கள் எட்டு எனச் சிவாகமங்கள் சொல்லுகின்றன. அவை கொல்லாமை, புலனடக்கம், பொறுமை இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு என்பன. இவைகளைச் சீலங்களென்று பெரியோர் கூறுவர். சீலம் வாழ்வுக்கு விழுப்பம் தருவது. சீலமில்லா வாழ்வில் சிவம் விளங்காது"1 இதனை அப்பர் பெருமானும்,

"எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லரிடு வார்வினை மாயுமால்"2

என்றனர். இச்சீலங்களாகிய வழிபாட்டுப் பூக்களை, 'கொல்லாமை' 'அடக்கமுடைமை' 'பொறையுடைமை' 'அருளுடைமை' 'அறிவுடைமை' 'வாய்மை' 'தவம்' 'அன்புடைமை' என எட்டு அதிகாரங்களாக வள்ளுவர் வகுத்துக் கூறுகின்றார்

1. சித்த மார்க்கம்–பக்–47. திரு. வி. க.
2. திருநாவுக்கரசர் தேவாரம். 5–54–1

இவ்வெட்டுச் சீலங்களும் சிறப்பாக இல்லறத்தார்க்கே கூறப்பட்டன. ஏனென்றால் 'தீரத்துறந்தவர்க்கு' "உடம்பும் மிகை" என்றமையால் அவர்கள் உலகியலிலிருந்தே மாறுபட்டு "வேண்டுதல் வேண்டாமை" இலாதவராய் இருப்பர். எனவே இங்கு, உலகியலிலிருந்தே—மனிதர்களுக்கிடையில் ஐம்புல நுகர்ச்சியுடையராக இருந்தே இல்லறத்தில் நிற்பார்க்கு இவை கூறப்பட்டன. இஃதை உணர்த்தவே திருக்குறளின்கண் அதிகார வைப்பு முறையிலும், 'இல்வாழ்க்கை' 'வாழ்க்கைத் துணை நலம்' 'மக்கட்பேறு' என்ற மூன்று அதிகாரத்தின் பின்பே இவ்வெட்டுச் சீலங்களும் ஏனையவும் இடம் பெறுகின்றன இன்னும் இவ்வெட்டுச் சீலங்களும் 'இல்லறத்தார்க்கே' என்பதுபோல் 'இல்வாழ்க்கை' என்ற அதிகாரத்திற்கு முன்பே, 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரம் வைக்கப்பட்டிருக்கின்றது.

'நீத்தார் ஐந்தவித்தவர்கள்'1. ஆனால் "சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்னும் ஐந்தின்வகை தெரிந்தவர்கள்2" இல்லறத்தார். இல்லறத்திலிருப்போர் உலகியலில் நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும இடையில் வாழ்கின்றவர்கள். பொறிபுலன்களின் தேவைகளுக்குக்கீழ்ப் படிகின்றவர்கள். எனவே அவர்களிடம் தவறுகள் ஏற்படுவது இயற்கை. ஆனால் புலனைந்தும் அவித்த அந்தணாளர்களாகிய துறந்தார்க்கு, புலனடக்கத்தையோ, பொறுமையையோ, அன்பையே, அருளையோ உபதேசிப்பது அறிவுடைமையாகாது. எனவே 'அவா' அறப்பெறாத இல்லறத்தார், இயற்கை வரம்பு மீறாமலும், இறைமையை மறவாமலும் இருக்க வேண்டி இவ்வெட்டுச் சீலங்களும் சொல்லப்பட்டன. இவ்வெட்டுச்சீலங்களிலும் சைவர்களால் மிகவும் போற்றப்படுவதும், ஏனைய ஏழு சீலங்களையும், தன்னுள் அடக்கியதுமான 'கொல்லாமை' நெறியே முதன்மையுடையது. உயிர்களுக்கு உடலங்கள் கொடுக்கப்பட்டிருப்பதன் நோக்கத்தை அறிவால் ஆராயும்போது அன்பு வயப்பட்டு ஒருவன் அவ்

1. குறள்-25 2. குறள்-27.

வுயிர்களின் மாட்டு அருளுடையவனுகின்ருன். எனவே கொல்லாமை நெறியில், அறிவும், அன்பும், அருளும் அடங்கி விட்டன. இனி மிருக உணர்வுகளுக்குக் காரணமாகும் புலாலை விடுத்தார் அடக்கத்துடனும் பொறையுடனும் நடந்துகொள்வது இயல்பு. இங்ஙனம் அறிவு, அன்பு, அடக்கம், அருள், பொறை ஆகியவை நிரம்பப் பெற்ருல் ஒருவன் வாய்மையாளனுவான். 1வாய்மையே தவமாகின்றது. இத்தன்மையாகக் 'கொல்லாமையின்' மூலம் ஏனைய சீலங்கள் விளக்கம் பெறுகின்றன. எனவே தான் வள்ளுவரும்,

"அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்"2

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"3

எனக் கொல்லாமை அறத்தை முதன்மையாக்கிப் பேசுகின்ருர்.

கொல்லா அறம் சமண பௌத்தர் போன்ற ஏனையோர்க்கும் உரியதேனும், அது சைவ நெறியாகத்தான் கொண்டாடப்படுகின்றது. ஏனென்ருல் சைவத்தின் காலத்தொன்மையும் சைவத்துள் அதற்குக் கொடுக்கப்படுகின்ற இடமுமே யாகும்.4 புலால் மறுத்தவரை வள்ளுவர் தெய்வ நிலைக்கு உயர்த்துகிருர்.

5"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" என்பது குறள்.

இக்குறளையே இன்னெரு வாய்பாட்டான்,

"மருவானைப் பெண்ணுக்கி யொருகணத்தில்
கண்விழித்து வயங்கு மப்பெண்
ணுருவானை யுருவாக்கி இறந்தவரை
யெழுப்புகின்ற வுறுவனேனும்

1: குறள்–295, 2. குறள்–321 3. குறள்-322
4. தமிழர்மதம்-பக்–34to46
5. குறள்–260.

கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக் .
கடிந்துண்ணுங் கருத்த னேலெங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை
ஞானியெனக் கூறொ ணாதே''[1]

என்றனர் இராமலிங்கவள்ளலும். தாயுமானரும், "கொல்லா விரதம் குவலய மெல்லாமோங்க"[2] எனச் சைவநெறியைச் சாற்றுவதைக் காணலாம்.

திருக்குறளில், தேவர்களைப் பற்றியும்[3] அவர்கள் தலைவனை இந்திரனைப் பற்றியும்[4] இலக்குமி,[5] திருமால்[6] ஆகியோரைப் பற்றியும், புத்தேளுலகம்[7] அல்லது வானோருலகம் பற்றியும் பல குறிப்புகள் வருகின்றன. இவற்றுள்,

"தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு''[8] என்ற குறளையும்

ஏனைய குறிப்புகளையும் கொண்டு திருவள்ளுவர் வைணவராயிருக்கவேண்டும் என வாதிப்பர். ஆனால் இது பொருந்தாது. ஏனெனில் ஐம்புல இன்பங்களே இருவினைக்குக் காரணமாகிப் பிறப்பை நல்குகின்றன. இவ்வைம்புல இன்பங்களான காணுதல், கேட்டல், உண்டல், உயிர்த்தல், உற்றல் ஆகியவை பெண்ணிடத்து இருக்கின்றன[9]; எனவே பெண்ணனவள் உலகப் பற்றுக்கும், பிறவிக்கும் காரணமாகின்றாள். இப்பற்றையும் ஏனையபற்றுகளோடு சேர்த்துத் 'தீரத்துறந்தாரே' தலைவன் தாளைத்தலைப்பட்டவராவார். இங்ஙனம் செம்பொருள் கண்டாரது இன்பத்தை, ஒண்டொடியார் தோளில் துயிலும் இன்பத்தோடு, உவமையாகச் சொல்லத் திருவள்ளுவர் நினைத்தார்; என்று சொல்லுவதுகூட அறிவுடைமையாகாது. எனவே இங்கு தாமரைக் கண்ணான் உலகு என்றதும் புத்தேளுலகைக் குறிக்கவே என்க.

---

1. திருவருட்பா-நமச்சிவாயப்பதிகம்.
2. தாயுமானர் பாடல்கள்—பராபரக்கண்ணி
3. குற-1073 4. குற-25 5. குற-617 6. குற-610, 1103 7. குற—213
8. குற-1103 9. குற—1101

"விளக்கறியா இருட்டறையில் கவிழ்ந்து கிடந்தழுது விம்முகின்ற குழவியினும் மிகப்பெரிதும்" சிறியரான மனிதர்கட்கு நல்லறங் கூறுவதுடன் சைவநெறிகளான, பதியுண்மை, பசுவுண்மை பாசத்தான் வருகின்ற பிறவியுண்மை ஆகிய மெய்ப்பொருள்களையும் கூறிச் செல்லுகின்றார் திருவள்ளுவர். உலகியலிலேயே நெறிதவறி நடக்கின்ற மாந்தர்க்கு 'நெறியோடு மனிதர்களாய் வாழட்டும்' என்ற அருள் நோக்கோடு திருவள்ளுவம் எழுந்ததெனில் மிகையாகாது.

"நாத்திகம் பேசி நாத்தழும்பேறும், 'இக்காலப் பெரியோர்' சிலர் வள்ளுவரை ஓர் உலகாயதவாதியாக்கப் பார்க்கின்றனர். இத்தெளிவற்ற காட்சியாளர்கள இறையுண்மையை இதயத்தானன்றித் தங்களது 'இயந்திர மூளை'களான் அறிய முற்படுகின்றனர்1. கண்ணிற் காணுபவைகளே உண்மையென மயங்கும் இவர்களது அறிவைப் "புல்லறிவு" எனக்கூறி வள்ளுவர் ஒதுக்கிவிட்டார். எனவே நாமும் ஒதுக்குவோமாக.

"ஓடுகின்றனன் கதிரவன் அவன்பின் ஓடுகின்றன ஒவ்வொரு நாளாய்" ஆகவே, "நாளும் நாம் சாகின்றோம்" என்பதை உணர்ந்து ' நலமிக்க நல்லோர் சொற்கேட்டு" நல்லாரோடு இணங்கி நல்வாழ்வு வாழத் திருக்குறள் என்ற செல்வம் இன்றியமையாதது வாழ்க்கை என்பது ஒரு பகல்2. இருள் நிச்சயம் வரும் அப்பொழுது நாம் ஒன்றும் செய்யவியலாது. எனவே ஒளியுள்ளபோதே செய்வனவற்றைச் செய்து முடித்துவிடவேண்டும்.

பிறவியென்ற கடலைக் 'காலம்' என்ற தோணியின் மூலம் கடந்தாக வேண்டும். அதற்கு அறம்' என்ற துடுப்பு அவசியம். அந்த அறத்தைச் செம்மையுற நல்கும் வள்ளுவம் நூல்களிலெல்லாம் தலையாயது! உலகிற்கோர் சட்டமும் அதுவே!

---

1. "It is through the heart that the Lord is seen, and not through the intellect" 'Complete works of Swami vivekananda' Vol II P. 304
2. "Stop and Consider! Life is but a day" "Keats in his Sleep and poetry" "Keats Poems" P. 41

நரியும் பரியும்

(சிவயோகி மா. இரத்தினசபாபதி பிள்ளை)

நரியும் பரியும் என்ற தலைப்பு ஒரு தத்துவ ஆராய்ச்சிக்குப் பயன்பட உதவும் என்று விளக்கிக் காட்டுதும். இந்தத் தலைப்பு தத்துவத்திலும் உள்ளது. புராணத்திலும் நரி பரியாக்கப்பட்டது என்று வரலாறு கூறும். புராணிகர் உலகமும் இதைக் கூறி மக்களிடம் நம்பிக்கையைப் பெருக்கும் முறையில் எல்லாம் வல்ல இறைக்குப் பெருமை கொடுத்துள்ளது. பத்தர்களாக உள்ளவர்களுக்கு இந்தக் கருத்தைப்பற்றி ஒருவிதமான மறுப்பும் மனத்தில் உதிக்காமல் "கடவுள் எதைச் செய்யக் கூடாது? எல்லாம் செய்வர்" என்று அவன் புகழ் கூறும் ஒரு விளக்கமாகப் புலப்படுகிறது. இந்தக் கதைக்கும் தத்துவத்துக்கும் எம்முறையில் சம்பந்தம் என்பதைக் காண்போம். தத்துவமுறையில் அதன் உண்மையை உணர்ந்தபோது தத்துவ தரிசனம்—தத்துவசுத்தி ஆகின்றபோது இந்த உண்மையை உணர்ந்த பெரியோர்கள் இவ்வாறு முயற்சி செய்துள்ளார்கள் என்பது விளங்கும், வெளிச்சம் வரும்வரையில் இருட்டில் உழலுபவர்கள் எங்கும் செறிந்த பிரகாசத்தை அறிய முடியாது உழலும் ஒரு நிலைபோலத்தான் புராணம் என்பது விளங்கும்.

நரி பரி மேற்சோலைக் கொண்டு இவைகளை ஆராயச் செல்வோம்—நரி பரி வரலாற்றைத் திருமூலர், திருநாவுக்கரையர், சுந்தரர் முதலியோரும் கையாண்டுள்ளனர். மணிவாசகரும் கையாண்டுள்ளார்—வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த பெரியோர்கள் கையாண்டுள்ளனர். புராண கதை (Historical facts) என்றிருந்தால் திரும்பத்திரும்ப அவ்வித நியதியில் நடைபெறவேண்டும் என்ற நியதியில்லை—தத்துவ முறையில் காணும்போது ஆன்மகோடிகளுக்குப் பரிபக்குவம் மெத்தென நடைபெறுவதால் சிலர் அந்நிலையை அறிந்தனுபவிக்கக் கூடும். கதை எல்லாருக்கும் தெரிந்ததே. தத்துவம் என்ன என்பதே சிந்தனைக்கு உரியது. திருமூலர்,

> துரியப் பரியில் இருந்தஅச் சீவனைப்
> பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு
> நரிகளை யோடத் துரத்திய நாதர்க்
> குரிய வினைகள்நின் றூலமிட் டன்றே 2276

துரீய மிருப்பதுஞ் சாக்கிரத் துள்ளே
நரிகள் பதினலு(ம்) நஞ்சுண்டு செத்தன
பரிய புரவியும் பாரிற் பறந்தது
துரிய மிறந்திடஞ் சொல்லவொண் ணுதே 2159

வியாக்கிரம் என்ற சொல் மேன்மை என்ற பொருளுடையது (இங்கு புலியல்ல). சாக்கிர, சொப்பன, சுழுத்தி அவத்தைகள் எல்லா உயிர்களுக்கும் உண்டு. விழித்தும் உலகம் விளங்காத நிலையைத் துரியம் என்பர். அதுவும் ஒரு உறக்கம்போன்ற நிலை. சாமான்யர்களின் உறக்கத்தில் ஒன்றையும் அறிவதில்லை—துரியத்தில் உள்ளவன் அறிவு நிலையில் உள்ளான்.

தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே

திருமந்திரம் 129

அது ஒரு விழிப்பு நிலையேதான். புறக்கண் தொழிற்பட்டபோதும், கருத்து புறத்திலும் செல்லுமளவும் புற உலகம் உள்ளது. கண் புறப்பார்வையை விட்டபோது காட்சியினுல் அறிவு விடுபட்டது. இதுபோல மற்ற இந்திரியங்களும் மனத்துடன் பொருந்தியே உலகை அறிகிறது. மனத்தைப் புறம்பாணதில் செலுத்தாமல் மேன்மை பொருந்திய ஆகாய பூதத்தில் சம்மியம் செய்பவர்க்குச் சிறிது சிறிதாக அதன் கீழான பிருதிவி. அப்பு, தேயு, வாயு முதலிய பூதச்செயம் அமைந்துவிடும். அப்படி அமைந்தபோது உருவங்களைக் கண்பார்க்கும் அறிவும், சத்தங்களை உணரும் செவிப்புலனறிவும், சுவையை உணரும் ரச அறிவும், தொழுகையை அறியும் பரிச உணர்வும், கந்தத்தை உணரும் மூக்கு அறிவும் எல்லாம் வியாபகமான பிரணவ முழக்கத்தில் இலயம் அடைந்துவிடும். உலக உற்பத்தி ஆகாசத்தில் இருந்தே உண்டாகிறது என்பது காரண நிலை; காரிய நிலை பிருதிவி. அதுபோலவே ஆன்மா விளக்கம்பெற இறைவனுல் ஆன்மாவுக்குக் கூட்டப்பட்டது சைவர்கள், சாக்தர்கள் கூறும் 36 தத்துவங்களே ஆகும். இவைகளில் தூல உடலைப்பற்றியவை ஆன்ம தத்துவம் 24. சூக்குமத்தைப்பற்றியவை வித்தியாதத்துவம் ஏழு. அதைவிட சூக்குமமாய்க் கீழுள்ளவைகளுக்குக் காரணமாய் இருப்பது

சிவதத்துவம் ஐந்தாகும்—இவைகள் முறையே தூலத்தைவிட சூக்குமம் வியாபகமாயும் அதைவிடச் சிவதத்துவம் வியாபக மானதாகவும் உள்ளது—சூக்குமமான சிவதத்துவத்தை அறி வதில் சிவயோகமும் சிவஞானமும் அடங்கியுள்ளது. இத்த கைய சிவதத்துவத்திலிருந்தே அதன் (24+7)=31 தத்து வங்களும் உதித்தன. மீண்டும் ஒடுங்கும்போதும் அங்கேயே தான் ஒடுங்குகின்றன. பால் என்ற பொருள் நீர் கலந்தே யுள்ளது—அம்சம் என்ற அன்னப் பறவை பாலை நீரின்றி எடுத்துக்கொள்ளும் என்றோர் வழக்கம் உலகில் உள்ளது. இதன் உள்ளக்கிடக்கை அம்சம் என்ற சொல்லுக்குப் பொருள் உயிர் என்பதாகும். சீவன் சரீரத்தில் பொருந்தி இன்ப துன்பங்களை அனுபவித்து விஷய வாசனையாகத் தன் னைப் பதிவுசெய்து கொள்ளுகிறது. மீண்டும் பிறவிக்கு வரும் போது வித்தே மரமாகி வாழ்க்கை ஞானங்களுக்குரிய கருவி கரணங்களை அடைகிறது. அது உடலில் பொருந்திய காலத் திலே இறைவனைப் பற்றிய அறிவு எங்கும் நிறைந்த ஆகாய பூதத்தாலேயே அறிய முடியும். இந்த உண்மையை அறிந்த போதே கருவி கரணங்களின் திறன் கெடுகிறது. திறன்கெட் டவன் வலிய வினைசெய்ய முடியாது—சுபாவசாத்வீகனாய்ச் சிவதத்துவத்துக்குத் தன் உடலையே அர்ப்பணித்து விடுகி ருன். இவன் உயிருடன் இருந்தபோதும் தீவினை இவனிடம் பொருந்துவதில்லை—மீண்டும் பிறந்தாலும் வலிய வினை கெட்டு சிவப்பேறு பெற வாய்ப்புள்ள அந்தக் கரண விருத்திகளுடன் மீண்டும் பிறப்பான். இந்தக் கருத்தைத் திருமூலர் உபதேசத் தில் கூறுவதைக் காண்க.

ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தந்
தீமேவு பல்கர ணங்களுள் உற்றன
தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே 120

வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்ருய் உடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே 151

2276—ஆவது திருமந்திரத்தில் மேலே கண்ட துரியத்தில் இருந்தசீவனை "பெரிய வியாக்கிரத்துள்ளே புகவிட்டு" என் ருர்—சிறிய வியாக்கிரம் என்பது சீவன்துரிய நிலையில் இருக்

கும்போது கருவிகளின் திறம் இல்லை. ஆனால் கருவிகளுடன் பொருந்தியே தான் இருப்பதும் உணர முடியும். பெரிய வியாக்கிரம் என்பது துரியத்தைக் கடந்த துரியாதீத நிலையாகும். அங்கு தான் என்ற ஒரு பொருளே இல்லாதபோது, கருவியேது? கரணமேது? அப்போது வஞ்சகத்தன்மையுடைய நரிக்கூட்டம் போன்ற அந்தக் கரணங்களை சிவம் துரத்திய போது கருவி கரணங்களால் அமையும் வினைக்கூட்டங்களும் ஓலமிட்டு ஓடின.

இதைப்பற்றி மேலும் 2159-ஆவது திருமந்திரத்தில் விளக்கம் காண்போம்

நின்மல சாக்கிரம் என்ற ஓர் ஒளியில் விழித்துறங்குவதை "துரியப்பரியில் இருந்த அச்சீவனை" என்றார். அங்கு நரிகள் பதினான்கும் உயிர்வாழ முடியாதபடி நஞ்சுண்டு இறந்தன. துரியப்பரப்பில் உள்ளது ஒரு நீல நிற ஒளி. அந்த ஒளியிடம் கருநிறத்தோடு கூடிய அந்தக் கரண சேட்டைகள் நிலைபெறாது ஒடுங்கிப் போகும். இதைத்தான் நஞ்சின் நிறமாகிய நீல வொளியில் செயல்படாது அழிந்துபடும் என்றார். அதன் மேல் வேகத்தையுடைய குதிரை பாரிற் பறந்தது என்றதை, "பரிய புரவியும் பாரிற் பறந்ததே" என்றார். துரியத்திலிருந்த சீவன் துரியாதீதம் சென்றதையும் உடல் நினைவு அந்தக்கரண சேட்டை முழுவதும் விட்ட நிலையையும் கூறுகிறார்.

துரியத்தைப் பெறும் அறிவே சிவஞானம் ஆகும். அதை அநுபவத்தில் அறிவதே யோகமாகும்—அநுபவம் இல்லாத உரை உணர்வு பயன்படாது. அது சர்க்கரை எழுதிய காகிதத்தைச் சுவைப்பது போலவே ஆகும். இந்தப் பிரகிருதிமயமான சீவனை சிவமயமாகச் செய்வதற்குக் குண்டலினி யோகம் என்று பேரிட்டனர்.

வாலை ஞானக்கும்மி (மதுரைவாலை சுவாமி)

பாம்பி ருக்குது புற்றுக்குள் ளேசுக
பந்தமி ருக்குது நெஞ்சுக்குள்ளே
வீம்பை அடக்கி உயர்ந்தக் கால்பரி
வேடிக்கை பார்க்கலாம் ஞானப்பெண்ணே 107
பித்துப் பிடித்த மனக்குரங் கும்வெறிப்
பேயுமபி டித்துக்கொண் டாட்டமிட்டால்

அத்தைய டக்கம ருந்துசெய் தாற்பரி
அன்றுந டத்தலாம் ஞானப்பெண்ணே 108

நடத்தலா மேமன வாசிஒரு நாலேந்து
பீற்றலே மூடாமல்
திடத்தி ருல்மனஞ் சித்தா ளுற்சித்தந்
தெளிந்து கொள்ளலாம் ஞானப்பெண்ணே 109

தெளிந்த சித்தம் பூட்டிய திற்சேணத்
தேறும் அறிவைய திற்சேர்த்துக்
குளிர்ந்து ஞானவை ராக்கியக் குறடா
கொண்டு மாட்டடி ஞானப்பெண்ணே 110

மூலத் தெருவிலொ ருபாய்ச் சலந்த
முச்சந்தி வீதியி லோர்பாய்ச்சல்
மேலேத்தெ ருவிலொ ருபாய்ச் சற்பரி
வேடிக்கை பார்க்கலாம் ஞானப்பெண்ணே 111

இந்தவி தங்கள் அறியா மல்மணி
மந்திர மென்றுதி ரிகின்றார்
அந்தர மானஎ ழுத்தறிந் தால்மணி
மந்திர மல்லவோ ஞானப்பெண்ணே 112

இந்தக் கருத்தைத் திருமூலர் வாக்கால் காண்க

தீண்டற் கரிய திருவடி நேயத்தை
மீண்டுற் றருளால் விதிவழி யேசென்று
தூண்டிச் சிவஞான மாவினைத் தானேறித்
தாண்டிச் சிவனுடன் சாரலு மாமே 2346

ஆறு றகன்று தனையறிந் தானவன்
நீறு கியாவினு மியாவுந் தனிஎய்த
வேறாய் வெளிபுக்கு வீடுற்று னம்மருள்
தேறாத் தெளிவுற்றுத் தீண்டச் சிவமாமே 2345

ஆனைக ளைந்து மடக்கி யறிவென்று
ஞானத் திரியைக் கொளுவியத னுள்புக்
கூனை யிருளற நோக்கு மொருவற்கு
வானக மேற வழியெளி தாமே 2316

நின்றஇச் சாக்கிர நீள்துரி யத்தினின்
மன்றனு மங்கே மணஞ்செய்ய நின்றிடும்
மன்றன் மணஞ்செய்ய மாயை மறைந்திடும்
அன்றே யிவனும் அவன்வடி வாமே 2277

ஐந்துஞ் சகலத் தருளாற் புரிவுற்றுப்
பந்திடுஞ் சுத்தா வத்தைப் பதைப்பினில்
நந்தி பராவத்தை நாடச் சுடர்முனம்
அந்தி யிருள்போலு மைம்மல மாறுமே 2293

இதுகாறும் திருமூலர் வாக்கால் சிவஞான நெறியில் மூலாதா ரத்திலிருந்து பிர்மரந்திரம் வரை அடைவதையும் அதைத் தூண்டுவதையும் அமைக்கும் குண்டலினியின் ஆற்றலைக் கண்டோம். அது செல்லும் நெறியைக் குதிரையாகவும் இராஜ வீதியாகவும் விளககப்பட்டது. அது புறப்படும் இடத்தை நரிப்பொந்து என்றும் குண்டலினியின் கீழ் நோக்கும் சக் தியை நரிகள் என்றும் காட்டப்பட்டது. வஞ்சகமாய் பிரகி ருதியை நோக்கிச் சீவனைச்செலுத்தி, அழிவுக்கு விடுவதால் ஞானேந்திரியம், கர்மேந்திரியம், அந்தக் கரணம் நான்கு ஆகிய இவைகளை நரிக்கூட்டம் என்றார். தசவாயுக்கள் இல்லாதபோது சரீரம் தொழிற்படாது. அதனல் தசவாயுக் களும் அந்தக்கரணங்கள் நான்கும் ஆகப் பதினன்கும் எனக் கொள்க—சிவசத்தி நிலை வெளிச்சத்தின் ஊடேயிருந்து தான் ஜீவர்களை இயக்குகின்றது என்பதைஅறியவும். இதுவே ஆகம ரகசியம். மேற்கோள் வருமாறு

மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே 77

தாங்குமின் எட்டுத் திசைக்குந் தலைமகன்
பூங்கமழ் கோதைப் புரிகுழ லாளொடும்
ஆங்கது சேரும் அறிவுடை யார்கட்குத்
தூங்கொளி நீலந் தொடர்தலு மாமே 1525

நீல நிறனுடை நேரிழை யாளொடுஞ்
சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவர் பராநந்தி யாணையே 734

இந்தக் கருத்தில் திருநாவுக்கரசர் கூறுவதை ஆராய்வோம்.

நரியைக் குதிரைசெய் வானும்
நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல் லானும்
விச்சின்றி நாறுசெய் வானும்

முரசதிர்ந் தானைமுன் னோட
முன்பணிந் தன்பர்கள் ஏத்த
அரவரைச் சாத்திநின் றானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே

இந்தப் பாசுரத்தில் ஆரூரன் யார் என்று உணர்ந்தால் பொருள் விளங்கி விடும். "ஆர்" என்பது உடலில் இருந்து உடலைத் தாங்கி நிற்கும் அறிவு மயமான சூரியனுக்குப் பெயர் ஆகும். "ஆர் எனும் நாமம் அகத்திற் செறிகதிர்ப்பேர்" என்பது சூடாமணி நிகண்டு.

உடலைச்சுமக்கும் சீவன் ஓர் ஒளிப்பொருள். உடலில்லாது உயிர் நிலையில் உள்ளதும் ஓர் ஒளி நிலைதான். உடலில் உள்ள போது அஞ்ஞானம் பொருந்தி இருள் மயமாக உள்ளது. உடல் தான் அல்ல என்று உடலுக்கு மேல் பிர்மரந்திரம் சென்றால் இருளையும் உணர்ந்து பல நிறங்களையும் பேரொளியையும் அடையலாம். இதுதான் புருடனாகியபோது விஷ்ணு தத்துவமாகவும் சீவனாகியபோது சதாசிவமாகியும் இருந்து தொழிற்படுகிறது. சதாசிவத்தைத் தாண்டினபோது சிவ சூரியன் பிரகாசிக்கும். ஒளியிலிருந்து உடல் உண்டாகி ஒளியால் தாங்கப்பட்டு வந்தாலும் திரும்புகால் யாத்திரை உடலின் தகுதியை உண்டாக்கி உடலிலிருந்து சிவம் பிரகாசிக்கிறது என்றதே ஆரூரன் என்ற சிவ சே திக்குப்பெயர். வேறுவிதமாய்ச் சொல்லப்போனால் எந்த அக்கினி உடலைத் தாங்கி நிற்கிறதோ அதுவே தான் அறிவு பெற்றபோது மாபெருஞ் சோதியான ஆரூரனாகும்.

வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யென்னும்
கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாளன்னுங்
தோயம தாய்எழுஞ் சூரிய னாமே
(திருமந்திரம 116)

குறிப்பு :—தோயம்=சலம்

உந்திக்கமலம் புருடனுடைய நிலை விஷ்ணு இங்கு அதிபர்.

புருடன் என்ற சொல்லுக்கு உடலைத் தரித்து உள்ளவன் என்பது பொருள். உடலுக்கு மத்தியமானது இருதயம்; அது அசைந்துகொண்டேயிருப்பது அசைவுள்ள வரையில் உயிர் உடலில் நிலைபெற்று நிற்கும். அசைவு நின்றுவிடின் உயிர் உடலை விட்டுச் சென்று விடும். உயிரை உருவகப்படுத்தி அஜபா நடனம் செய்யும் தியாகராஜன் என்ற மூர்த்தியை உலகோர் கருத்துக்கு அமைத்துக் காட்டினர். உயிர் உடலில் உள்ளபோது இருதயத்தை ஆசரித்து நிற்கும். உடல் தானென்ற அறிவு புத்தியைச் சார்ந்தது. புத்திநிலை சிரசிலும் அதன் மேலும் உள்ள பிரதேசமாகும்—அதனால் சிரசைச் சதாசிவன் என்று கொண்டனர். சிவம் பேரறிவுப் பொருள். ஆன்மா சிற்றறிவுடைப்பொருள். ஆன்மாவின் தகுதி அறிந்தால் பேரறிவுடன் பொருந்தும். தகுதி அறியாதபோது சிற்றறிவாய்ப் பந்திக்கப்பட்டுள்ளது என்பதை உணர்த்தவே ஆகமவாதிகள் சிவலிங்கத்தை வழிபாட்டுக்குரிய பொருளாக்கினர். தன்னையே உலகுக்கு (உயிருக்கு)க் கொடுத்து சீவவர்க்கத்தைத் திருத்தியமைத்தலைக் காட்டுவதே தியாகராஜ தத்துவம். எல்லா ஊர்களிலுமுள்ள சிவ இலிங்கத்திற்கும் பொருந்துமாயினும் சிறப்பாக உள்ள தத்துவ நுட்ப அமைவு இதற்கே. ஆரின் விளக்கம் காட்டுவது ஆரூர் ஆகும். இத்தகைய சோதியை உடலில் கண்டவர் பிறப்பறுப்பர்: தஞ்சை ஜில்லா திருவாரூர் அல்ல என்பதைத் தேர்ந்துணர்க இந்தப் பொருள் உணர்ந்து அறிந்தால் ஆரூரன் என்ற பெயரின் விளக்கம் உணரலாம். அதுதோற்றத்துக்கும் இருப்புக்கும் இறுதிக்கும் அப்பாற்பட்ட ஒரு ஒளி நிலை. அதைத் தேவதேவன் மஹாதேவன், ஆதிமூர்த்தி என்றெல்லாம் அழைத்தன நூல்கள்,

இத்தகைய பெருமையுடைய பேரொளிதான் நரியைக் குதிரை ஆக்கவல்லது; நரகரைத் தேவனுக்க வல்லது. விரத முதலிய கிரியைகளால் வழிபாட்டுக்கு உரியது. வித்து என்று சொல்லப்படும் விதைப்பண்டம் இல்லாமல் நேரே நாற்றாக ஆகவல்லது. உடலில் நாதமயமாக நின்று அதிரச் செய்வது. (முரசு அதிர்ந்து ஓசை செய்வதுபோல்)

(தொடரும்)

அடி முடி அளப்பொணுத் தெய்வம்

(மா. ப. தியாகராசன் பி. ஏ.)

சைவ சமயம் கொண்டுள்ள வழிபடுகடவுள், சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி அம்மான். கடவுள் தன்மையை அவன் மூலம் சைவசமயம் உள்ளவாறு எடுத்துக் காட்டுகின்றது. ஞானத்தால் நம்முன்னோர் கண்ட உண்மைகள் விஞ்ஞானத்தினுல் இன்று கண்டு அதிசயித்தக்க நிலையில் போற்றப்படுகின்றன. அதில் ஒன்று சிவபெருமானின் அடிமுடி காணொணுத் தத்துவம்.

படைப்புத் தொழிலை மேற்கொண்டுள்ள பிரமன் அழற்பிழம்பாய்ச் செம்மேனி கொண்டு விளங்கும் முழுமுதற் கடவுளின் முடியைத் தேடி அன்னப் பறவை வடிவு கொண்டு சென்றன னென்றும், காத்தற்ருெழில் மேற் கொண்ட கமலக்கண்ணன் பன்றிவடிவு கொண்டு பூமியுட் சென்று அவனுடைய அடியினைக் காண முற்பட்டன னென்றும் புராண வரலாறு கூறுகிறது. அவர்களுடைய முயற்சி பயன்படாது ஒழியவே சிவபெருமான் அவர்களுடைய வேண்டுகோட் கிணங்கி காட்சிக் கெளியனுயினன் என்றும் கூறப்படுகிறது. எனவே தன் முனைப்பற்று அவனுடைய அருளே துணையாக அவனைக் காணவேண்டுமே யல்லாது வாக்கினுலோ நினைப்பினுலோ அவனை அறிய ஒண்ணு நிலையே அவனுடைய உண்மைவடிவம். வாக்கைப் பிரமனுகவும் நினைப்பை விஷ்ணுவாகவும் உவமித்துக் கூறிற்று புராணம்.

திருஞான சம்பந்தருடைய தேவாரப்பதிகம் ஒவ்வொன்றும் இத்தத்துவத்தை விளக்கிக் காட்டுகிறது.

உள்ளதன் றனைக் காண்பன் கீழென்ற மணிவண்ணனும்
உள்ளதன்றனைக் காண்பன் மேலென்றமாமலர் அண்ணலும்
உளளதன் றனைக்கண்டிலர் ஒளியார்தருஞ் சடைமுடியின் மேல்
உள்ளதன்றனைக் கண்டிலா வொளியார் விளநகர் மேயதே.

தேவர்களும் அமரர்களுந் திசைகள் மேலுள தெய்வமும்
யாவரும் அறியாததோா அமைதியால் தழலுருவினர்
மூவருமில ரென்னவும் முதல்வரும் இவரென்னவும்
மேவரும் பொருளாயினர் மேயது விள நகரதே.

விஞ்ஞானமும் ஒளியின் (Light) அடிமுடி காணமுடிய வில்லை யென்ற முடிவுக்குத் தான் வந்துள்ளது. சூரிய னுடைய ஒரு பொருள் பிரதிபலித்தாலல்லது நாம எதையும் காணமுடியாது, சூரியனுக்கும் நாம் காணும் பொருள் களுக்கும் இடையே நிற்கின்ற இந்தப் பூத ஒளியையே நாம் காணமுடிய வில்லை யென்றால சிவபெருமானின் தெய்வ ஒளியை நாம் காண முடியுமா? சூரியகிரணங்களைப் பிரித்து ஏழுவர்ணங்களாகக் காணமுடிகிறது. அதேபோல் சிவ சக்தி ஐக்கிய சொரூபமாகச் சிவபெருமான் அடியார் களுக்குக் காட்சி அளித்துள்ளார்.

"மானுங்காரத்து ஓருருவாய் நிற்கின்ற சிவன், ஈரியல் பாய் ஒருவின் முதல் பூதலம் ஒன்றிய இரு சுடர், உம் பர்கள் பிறவும் படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை" என்று திருஞானசம்பந்தர் பாடியிருப்பதைக் காணலாம். பின்னர் அப்பதிகத்தை,

" இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினையவல்லா ரில்லை நீள் நிலத்தே.''

என முடிக்கின்றார்.

ஆகாச தத்துவத்தையே நாம் காணவும் உணரவும் முடியவில்லை யென்றால் அதுவுமாய் அதற் கப்பாலுமாய் உள்ள இறை சக்தியின் தத்துவத்தை உணர்வ தெப்படி முடியும்? அவனே நம் "ஊன் புகுந்து உளம் மன்னி" உணர்த்தினாலல்லது உணரமுடியாது. அப்பொருள் "அறி வால் அறிகின்றதலால் எவ்வாறு ஒருவர்க் கிசைவிப்பதுவே" என்று அருணகிரிநாதர் பாடியிருக்கிறார்.

சிவ பெருமான் அவ்வாறு தன்னுள் புகுந்து விளையாடு வதை அனுபவித்துப் பாடுகிறுர் திருஞான சம்பந்தர்.

அந்தமாதி அயனும் மாலும் ஆர்க்கும் அறிவரியான்
சிந்தையுள்ளும் நாவின் மேலும் சென்னியு மன்னிஞன்
வந்தென் உள்ளம் புகுந்து காலை மாலை யாடுவான்
கந்தமல்கு காஞூர்மேய யெந்தை யெம்மானே.

அப்பர் பெருமானும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பரிச தீக்ஷையைப் பெற்றனரேயன்றி திருஞான சம்பந்தர் கூறும் அனுபவங்களைப் பெறவில்லை யென்றே கூறவேண்டும். மணி வாசகப் பெருமானும் தன் "ஊன் புகுந்து உளம் மன்னி" மனமாகிய கல்லைப்பிசைந்து கனியாக்கிஞ ரென்று பாடியுள் ளாரேயன்றி அத் தெய்வவடிவம் உள்புகுந்து உணர்வு நல்கி விளையாடிய அனுபவத்தைப் பெறவிலலை. எனவே யாவர்க் கும் அறிவரிய மேலான அனுபவங்களைப் பெற்றுப் பாடி யுள்ள முதல் மூன்று திருமுறைகளைப்பாடப் பாடத்தான் அம்மேலான அனுபவத்தை நாமும் பெற முடியும். சிவ பதத்தை நாம் சென்றடையவேண்டு மென்றெண்ணுமல் அவர் நம்மை யாட்கொள்ள என்று வருவாரோ? என்று நினைந்து வழிபடவேண்டும்.

"பாசமான களைவார் பரிவார்க் கமுதமனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அடங்கல் விடைமேல் வருவார்
காசை மார்போல் மிடற்ருா கடவூர்மயானம் அமர்ந்தார்
பேசவருவார் அவரெம் பெருமானடிகளே.

என்று எம்மானுடைய எளிவரும் தன்மையைத் திருஞான சம்பந்த சுவாமிகள் உவந்து பாடி யுள்ளார். நம்மைச் சூழ்ந்துள்ள காற்றை நாம் சென்றடைய வேண்டுவதில்லை. விசிறி கொண்டசைத்துணரலாம். அதேபோல் நுண்ணி தாய் வெளியாய் நம் உள்ளும் புறம்புமாயுள்ள இறைவனை அவனுடைய அருட்பாடல்களை ஓதி அசைத்து உணர்ந்து அனுபவிக்க வேண்டும்.

எறும்புகளின் சமாதி நிலை

கோ. நீ. சி.

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் ஆதரவில் பதிப்பிக்கப் பெற்ற "எறும்புகளின் அற்புத உலகில்" என்ற நூலில் பின்வரும் செய்திகள் காணப்படுகின்றன.

முட்டைகளை இட்டு இனப்பெருக்கம் செய்வதுதான் ராணி எறும்பின் பணி. ஒரு தடவையில் ராணி எறும்பு பல முட்டைகளை இடும். இராணியம்மா இடும் முட்டைகளைப் பராமரிக்கும் பொறுப்பைச் சில பணிப்பெண் எறும்புகள் ஏற்றுக் கொள்ளும். இரண்டு மூன்று நாட்களானதும் முட்டைகள் பொரிந்து எறும்புக் குஞ்சுகள் வெளிப்படுகின்றன. இக்குஞ்சுகள் வெறும்பான புழுக்களாக இருக்கும். பார்க்கமிக அழகாக இருக்கும். வளர்ப்புத் தாய்களின் வாய் வழியாக, இக்குஞ்சுகள் இரைபெறும். ஆர்வத்துடன் குஞ்சுகள் உணவை உறிஞ்சும் காட்சி அற்புதமானது.

இக்குஞ்சுகளின் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவை வெப்பம். ஆதலால் பகற்பொழுதில, வெயில் காயும் போது குஞ்சுகளைக் கவ்விக்கொண்டு, பணிப்பெண் எறும்புகள் கூட்டுக்கு வெளியே வந்து சேரும். அடை அடையாக அமர்ந்து வெப்பமேறும் வரையில் இருக்கும். ஏதாவது ஆபத்து நேரிடும் என்று தெரிந்துவிட்டால் போதும். உடனே எல்லா எறும்புகளும் குஞ்சுகளைக் கவ்வி எடுத்துக் கொண்டு வளைக்குள் புகுந்து மறைந்துவிடும். இரவு நேரங்களில குளிர்படாதிருக்க வேண்டி, குஞ்சுகளை வளைக்குள் ஆழமான பகுதிகளில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும்.

"இவ்வாறு சில நாட்கள் வளர்ந்ததும், புழுக்களாக இருக்தும குஞ்சுகள் முழு வளர்ச்சியடைகின்றன. அப்போது, அக்குஞ்சுகளின வாயிலிருந்து உமிழ்நீர் ஊறிவரும். அது நூலிழைபோல் நீண்டுவரும். அந்த நூல் எறும்புக் குஞ்சின உடல் முழுவதிலும் படியும். குஞ்சைச் சுற்றி அந்த நூல் கூடுபோல் அமையும். இக்கூட்டுக்குள் அகப்

பட்ட எறும்புக் குஞ்சு அசையக்கூட முடியாது. இது அதற்குச் சிறைவாசம் போன்றது. சமாதி நிலை என்றாலும் பொருந்தும். இயற்கையின் அற்புதங்களில் ஒன்று இந்தச் சமாதி நிலை. படைப்புத் தொழிலில் புதிய சாதனையைக் காட்டுவது இந்த நிலை.

ஒரு வார காலம் இந்தச் சமாதி நிலையில் அடைந்து கிடந்தபின், வெளிப்படும்போது, வெண்மையான புழு உருவில் இருந்த எறும்புக் குஞ்சு ஆறுகால் இனத்தின் நேரிய வாரிசாக அசல் எறும்பாக உருமாறி விடுகிறது. இது எப்படி உருமாறுகிறது? சமாதி நிலைக்குள் என்ன நிகழ்கிறது? அங்கு உள்ள அற்புத ரகசியமதான் என்ன? புகழ் மிக்க ஆராய்ச்சியாளர்களுக்குக் கூடப் புரியாத புதிர் தான் இது.''

இது நம் மனத்தில் பல சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் தூண்டுகின்றது. என்னே இறைவன் அருள்திறம்! என்பது முதல் உணர்ச்சி. வேகமும், பரபரப்பும் நிறைந்த தற்கால உலகில் சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் மிகமிக அரிது. ஆனால் சும்மா இருக்கின்ற நிலையில் தான் புழு எறும்பானது போன்ற பெரும் மாறுதல் நம் மிடையே நிகழக்கூடும். சீவன் சிவமாவது, செம்பு பொன் னாவது போன்ற மாறுதல். இம்மாறுதலுக்கு அத்தன் அருளை வேண்டிச் செயலற்றிருப்பதன்றி வேறு வழியில்லை.

''பேய்ஒன்றுந் தன்மை பிறக்கு மளவும்இனி
நீஒன்றுஞ் செய்யாது நில்''

—திருவருட்பயன்

(பேய் ஒன்றுந் தன்மை—சிவானுபூதியான நிட்டை கூடுதல்)

—:0:—

கடவுள் அருள் சக்தி

காந்தியடிகள்

எங்கும், எப்பொருளிலும் வியாபித்துள்ள, விவரிக்க முடியாத, அறிவுக்கு எட்டாத ஒரு மர்மமான சக்தி இருக்கிறது. அதை நான் பார்க்க முடியாவிட்டாலும் உணருகிறேன். கண்ணால் காண முடியாத இந்த சக்தியை நான் உணருகிறேன்; எனினும் அதை ருஜுப்பிக்க முடிவதில்லை. ஏனெனில், எனது புலன்களின் மூலம் நான் உணர்வதைப் போன்ற ஒரு பொருளாக அது இல்லை. அது புலன்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது.

என்னைச் சுற்றிலும் உள்ள ஒவ்வொன்றும் எப்போதும் மாறிக்கொண்டும் எப்போதும் அழிந்து கொண்டும் இருப்பதை நான் தெளிவற்ற முறையில் காண்கிறேன். எனினும், இவ்வளவு மாறுதலுக்கிடையேயும் மாறுதலற்ற ஒரு ஜீவ சக்தியையும் நான் தெளிவின்றிக் காண்கிறேன். இந்த சக்தி எல்லாவற்றையும் ஒன்றாக இணைக்கிறது, சிருஷ்டிக்கிறது, அழிக்கிறது, மறுபடியும் சிருஷ்டிக்கிறது. உயிர்ப்பிக்கும் அந்த சக்தி அல்லது தத்துவமே கடவுள் ஆகும். புலன்களின் மூலம் மாத்திரம் நான் காணும் எதுவும் நிலைக்க முடியாது அல்லது நிலைக்காது. கடவுள் ஒருவர் தான் நித்தியமாக நிலைத்திருப்பவர்.

இந்த சக்தி அருள் சக்தியா? தீய சக்தியா? அது மாசற்ற அருள் சக்தி என்பதை நான் காண்கின்றேன். ஏன் எனில், அந்த அருள் சக்தியின் காரணமாகவே மரணத்திடையே உயிர் உறுதியுடன் தொடர்ந்து வருகிறது. பொய்யினிடையே உண்மை உறுதியுடன் நிலைபெற்று வருகிறது; அந்தகாரத்தினிடையே ஒளி உறுதியுடன் திகழ்ந்து வருகிறது. உயிர், உண்மை, ஒளி எல்லாம் கடவுள்தான். அவர்தான் அன்பு மயம். எல்லாவற்றையும் விட மேலோன்னதமான நல்லது என்பது கடவுள்தான்.

அறிவுக்கு மாத்திரமே திருப்தி ஏற்படும்படி கடவுள் செய்பவராயின், அவர் கடவுள் அல்லர். கடவுள் கடவுளாக இருக்கவேண்டுமாயின், உள்ளத்தை அவர் ஆட்சி புரிந்து அதை அடியோடு மாறறக் கூடியவராக இருக்கவேண்டும். அவரது பக்தரின் மிகமிகச் சிறிய தான ஒவ்வொரு நடவடிக்கையிலும் கடவுள் தம்மைத்தாமே வெளிப் படுத்திக்கொள்ள வேண்டும். ஐம்புலன்களால் ஏற்படுவதைக் காட்டிலும அதிக உண்மையான, திடமான உணர்வின் மூலம்தான் அதை அறிந்துகொள்ள முடியும். புலன்களின் உணர்வுகள் நமக்கு எவ்வளவு உண்மையானவையாகத் தோன்றினாலும், போலியாகவும், ஏமாற்றுவனவாகவும் இருக்கக்கூடும்; பெரும்பாலும் அவ்விதமே இருக்கவும் செய்கின்றன. புலன்களுக்கு அப்பாற்பட்ட உணர்வு தவறுவதில்லை என்பது ருஜுவாகியிருக்கிறது. வெளிப்படையான சாட்சியத்தின் மூலம் அல்ல, ஆனால் உள்ளத்தில் கடவுள் உண்மையாக இருப்பதை உணர்ந்து கொள்வோரின் நடத்தையிலும் தன்மையிலும் ஏற்படும் மாறுதலின் மூலம் அது ருசுவாகியிருக்கிறது.

எல்லா நாடுகளிலும், எல்லாப் பிரதேசங்களிலும் இடையறாது வாழையடி வாழையாக அவதரித்துள்ள தீர்க்கதரிசிகள், ஞானிகள் முதலியோரின் அனுபவங்களில் அத்தகைய ருசுவை நாம் காண்கிறோம். இந்த சாட்சியத்தை நிராகரிப்பது, நம்மை நாமே மறுத்துக்கொள்வதாகும்.

தாய்ச் சமயம் சாரல்

(அம்பை)

நம் இந்தியா பிற சமயத்தினர் ஆட்சியிலுற்றிருந்த போது நம இந்துக்கள பன்னூறுயிரவர் பிறத்தவர்களாக மாற்றப்பட்டனர். அவ்வாட்சியாளர்கள் வெளியேறிவிட்டாலும்அவர்கள் சமயம், பண்பாடு இங்கு நிலைத்திருக்கத்தக்க

வகையில் சிறந்த அடிப்படையை நிறுவிச் சென்றுள்ளனர். அவர்களால் ஏற்படுத்தப்பெற்ற நிறுவனங்கள் மேலும் மேலும் பொருளாலும், பெண்ணாலும் மற்றும் மன்பதை மயங்கத்தக்க ஆசைகளைத் தீர்க்க வழிசெய்வதாலும் தங்கள் சமயத்துக்கு நம் இந்துக்களை ஈர்த்துக்கொண்டேயிருக்கின்றன. இந்நிலையை இந்துக்களாய நாம் எவ்வளவு காலத்துக்குப் பார்த்துக்கொண்டிருக்க இயலும்?

1. ஆகவே நாம் நம் சமய உண்மைகளைப் பாமர மக்களுக்கு எடுத்துக்கூறிப் பிறசமய உண்மைகளைவிட நம் சமயக் கொள்கைகள் தாழ்ந்தவையல்ல என்பதை அவர் உள்ளங் கொள எடுத்துக் காட்ட வேண்டும்.

2. மேலும் மேலும் பிற சமயத்தினர் நம் இந்து மக்களைத் தம் சமயத்துக்கு ஈர்க்கா வகையில் அவ்வப் பகுதியிலுள்ள இந்துமக்கள் விழிப்பாயிருக்க வேண்டும்.

3. முன்னரே கிறித்தவ மதம் முதலிய வேறு சமயங்களுக்கு மாறியவர்களைத் தம் தாய்மதமாகிய இந்து மதத்துக்குத்திரும்ப அவர்கள் பிரியப்படின் அதற்காம்வகையிலுதவி அவர்களுக்கு வேண்டிய வசதி முதலியவைகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

இந்நிலையில் நெல்லை மாவட்டத்தில் இடிந்தகரை எனும் ஊரில் சென்ற ஆண்டு 160 குடும்பங்களிலுள்ள 876 மக்கள் தம் தாய் மதமாய இந்து சமயத்திற்கு மாறி இந்துக்களாயினர். அவர்களுக்கு வணங்க ஒரு முருகர் கோயில கட்டிக் கொடுதல், படிக்க ஒரு பள்ளி ஏற்படுத்திக் கொடுத்தல், நோய் போக்க மருத்துவமனை ஏற்படுத்திக்கொடுத்தல் முதலியவற்றிற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அவர்கள் தாய்ச்சமயம் வந்து ஓராண்டானதால் அதற்குரிய மகிழ்ச்சி விழா அக்டோபர் 27. 28, 29ஆம் நாட்களில் இடிந்தகரையில் மிகச் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது.

நம் சமாஜப் பேரன்பர்கள் யாவரும், இவ்வாறு சமயம் மாறிப் போனவர்கள் திரும்பவும் தம் தாய்ச் சமயமாம் சைவ சமயத்துக்கு வரும் விருப்பத்தை யாரிடமாவது தெரிவித்தால், அதில் ஊக்கம் காட்டி அவர்களை மீட்டும் நம் அன்பர்களாக்கி சமயத் தொண்டாற்ற வேண்டுகிறோம்.

இது உரிமைபெற்ற நம் இந்திய நாட்டில் நம் சமயப் பாதுகாப்புக்கு மிகவும் வேண்டற்பாலதாய சிறந்த தொண்டாகும். பொழுது போக்கிப் புறக்கணித்தால் எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பரீசன் என்பதை ஓர்ந்து ஆவன செய்வார்களாக.

ஒரு வேண்டுகோள்

(அ. சோமசுந்தரம் செட்டியார் எம். ஏ.)

இவ்வுலகில் பெரும்பாலான மக்கள் உலகப் பொருள்களின்மூலம் ஐம்புல இன்பத்தை அனுபவிப்பதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். அதற்காக உலகப் பொருள்களைச் சேகரிப்பதில் ஒருவரோடொருவர் போட்டியிடுகின்றனர். இதனால் உலகமெங்கும் பகையும், போரும், பூசலும் குழப்பமும விளைகின்றன. உலகப் பொருள்களின் மூலம ஐமபுலனகள் வழி அனுபவிக்கும் இன்பம் சிற்றின்பமாகும. அது துன்பத்தோடுகூடியது. அதற்கு மாறாகக் கடவுளிடத்து அன்பு செலுத்துவதனால் பெறப்படும் இன்பம் பேரின்பமாகும. அது துன்பம் கலவாத சுத்த இன்பம. இந்தப் பேரின்பததை அனுபவிப்பதற்கு ஒருவரோடொருவர் போட்டியிடவேண்டிய அவசியமில்லை. கோடிக்கணக்கான மக்களும் கூட கடவுளிடத்தில் அன்பு செலுத்தி ஒரே காலத்தில் பேரினபத்தை அனுபவிக்கலாம். பகைமை முதலிய தீமையும் விளையமாட்டா. நேசமனப்பான்மை வளரும்.

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்
அகண்டா காரசிவ,
போக மென்னும் பேரின்ப வெள்ளம்
பொங்கிப் பூரணமாய்

ஏக உருவாய்க் கிடக்குதையோ
இன்புற்றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்கேசேர
வாரும் செகத்தீரே"

என்று தாயுமானர் இரங்கிப் பேரின்பத்தை அனுபவிக்க உலகமக்களைக் கூவி அழைக்கின்றார்.

அந்த சுத்த இன்பத்தை அனுபவிப்பதுதான் வாழ்க்கையின் இலட்சியமென்று, அந்த இன்பத்தை அனுபவித்த பெரியோர்கள் தங்களது உபதேசத்தாலும் அருட் பாடல்களாலும் கூறியிருக்கின்றனர். அப்பாடல்களை இசையுடன் பாடுவதாலும் பாடக் கேட்பதாலும் நமக்குக் கடவுளிடத்தில் அன்பு பெருகிப் பேரின்பத்தை அடையும் வழியில் நாம் செல்வோம்—இப்பழக்கத்தைச் சைவக் குடும்பத்தினர் தினந்தோறும் மேற்கொண்டு அனுசரித்து வந்தால் நம் சமயத்திற்குப்புத்துயிர் கொடுப்பதாகும்.

தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாடல்கள் வானொலியில் சிலசில சமயங்களில் ஒலிபரப்பப்படுகின்றன. அவற்றைத் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் ஒலி பரப்பினால் மக்களுக்குக் கடவுளிடத்தில் அன்பு பெருகி நல்வாழ்வு உண்டாகும்; தேசத்திற்கும் நன்மை பெருகும்.

வானொலித்துறை அதிகாரிகள், பெரும்பான்மையான மக்கள் விரும்பிக் கேட்கும் பாடல்களையே ஒலிபரப்புவதைத் தங்கள் கடமையாய்க் கொண்டுள்ளபடியால் தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாடல்களைத் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் அரைமணி நேரம் ஒலிபரப்பச் சென்னை மைலாப்பூர் வானொலி நிலைய ஆசிரியருக்கு வேண்டுகோள் விடுக்கும்படி நமது சித்தாந்தத்தைப் படிக்கும் நேயர்கள் பலரையும் கேட்டுக்கொள்ளுகிறோம். இது நம் சமயத்திற்கும் மக்களுக்கும் செய்யும் பெருந்தொண்டாகும்.

நம் சமாஜத்தின் சார்பிலும் 27-10-68 அன்று நடந்த செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட செய்தியை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனால் சமாஜப் பேரன்பர்கள் யாவரும் தாங்களும் தங்கள் நண்பர்களும் சைவ சபைகளும் நம் சைவத் திருமுறையை ஒலிபரப்ப வேண்டுமென்று சென்னை, திருச்சி வானொலி நிலையத்தினருக்குக் கடிதம் மூலமாய் வேண்டுகோள் விடுக்குமாறு வேண்டுகிறோம். (துணையாசிரியர்)

குடந்தை ஸ்ரீ சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் பெரிய மடம் திறந்த வெளி அரங்கில் 25-10-68 வெள்ளி மாலை 7 மணிக்கு ஜகத்குரு சாந்ததேவ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள் காந்தி நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்தார்கள். சிவப்பிரகாசர் செந்தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் கோ. பெ. வையகம் வரவேற்க தஞ்சை மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் அவர்கள் தலைமையில் கோவை என். கிரிதாரிபிரசாத் "காந்தி அடிகளும் திருநாவுக்கரசரும்" என்ற பொருள் பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள். சங்கத் தலைவர் சி. ராமசாமி முதலியார் பி.ஏ.பி.எல். அவர்கள் நன்றி கூற விழா நிறைந்தது.

26-10-68 மாலை 7 மணிக்கு சங்கச் செயலாளர் ஆர். திருநாவுக்கரசு பி. ஏ. வரவேற்புரை கூற தமிழக அரசு மேல்சபைத் தலைவர் திரு எம். ஏ. மாணிக்கவேலர் பி. ஏ. பி. எல். அவர்கள் தொடக்க உரை ஆற்றினார்கள். பொள்ளாச்சி என். மகாலிங்கம் பி. எஸ். சி. எப். ஐ. இ. அவர்கள் தமது தலைமை உரையில் காந்திய கல்வித்திட்டம் செயல்பட வேண்டுமென்றும், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய கிராமச் சிறுதொழில் பரவலாக அமைக்கப்பட்டாலன்றி நீங்காதென்றும் வலியுறுத்திக் கூறினார்கள். என். கிரிதாரி பிரசாத பி. ஏ. பி. எல. அவர்கள் காந்தி அடிகளும் இராமலிங்கரும் என்ற பொருள்பற்றிச் சிறந்த சொற்பொழிவு ஆற்றினார்கள். சங்கப் பொருளாளர் சிக்கல் க. ராஜகோபால் பிள்ளை நன்றி கூற விழா இனிது நிறைவுற்றது

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள் பெரிய மடத்து வீரபத்திர சுவாமி மீது கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்பாடிய நூலே தக்க யாகப்பரணியாம். வீரப் பத்திரப் பரணி என வழங்கும் இந்நூல் அரங்கேற்றப்பட்ட மடத்திற்கும் கோயிலுக்கும் முன்புள்ள திறந்தவெளி யாகும். கூத்தரின் பாமணம் கமழ்ந்த இடத்தில் பூமணம் கமழ நினைத்த மடாலயத்தார் இந்த நந்தவனத்தை அமைத் தனர்.

26-10-68 மாலை 6 மணிக்கு தமிழக அரசு மேல் சபைத் தலைவர் திரு. எம். ஏ. மாணிக்கவேலர் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் குடந்தை கோட்டாட்சித் தலைவர் திரு. எம். முத்துராஜ் பி. ஏ. அவர்கள் நந்த வனத்தைத் திறந்து வைத்தார்கள். பொள்ளாச்சி தொழில் அதிபரும் ராமலிங்கப் பணிமன்றத் தலைவருமான என். மகா லிங்கம் பி. எஸ். சி. எம். ஐ. இ. அவர்கள் பூச்செடிகளை நட்டார்கள். பெரிய மடத்துச் சுவாமிகள் முன்னிலையில் மடத்து நிர்வாகக்குழு செயலாளர் திரு. ஆர். திருநாவுக்கரசு பி. ஏ. அவர்கள் நன்றிகூற விழா இனிது நிறைந்தது. நந்த வனம் அமைக்கப் பொருள் உதவிய திருச்சி தேங்காய் வியா பார அன்பர்களான வீரப்ப பலிகார், சன்னபசப்பா பசப்பாஉறண்டி, பி. ஆர். ஓஜி ஆகிய மூவரும் மாலை அணி வித்துப் பாராட்டப்பட்டனர்.

கார்த்திகைத் திங்கட் சிறப்பு நாள்கள்

7 (22-11-68) மூலம்—மூர்க்கநாயனார் விழா

8 (23-11.68) பூராடம்—சிறப்புலி நாயனார் விழா

18 (3-12-68) கார்த்திகை தீப விழா

கார்த்திகை—கணம்புல்ல நாயனார் விழா

28 (13-12-68) உத்திரம்—மெய்ப்பொருள் நாயனார் விழா

29 (14-12-68) அத்தம்—ஆனாய நாயனார் விழா

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர்கள் தங்கள் சந்தாத் தொகை ரூபாய் ஐந்தினையும் 31-12-68க்குள் சமாஜ முகவரிக்குச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப் பெயர், 2. சந்தா எண் 3. தெளிவான முகவரி, 4. மாவட்டம் ஆகியவற்றை நன்கு குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் ஆசிரியலார் இசைவு பெற்று தங்கள் சந்தாத் தொகையினை விரைவில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை "திரு. சுந்தரம், செயலாளர், மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம், 163, ஜலன்பந்தர், குலாலம்பூர்" என்னும் முகவரிக்குச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர்,
சைவசித்தாந்த மகாசமாஜம்,
12. கீழ மாடவீதி,
மயிலாப்பூர், சென்னை-4.

27-10-68 ஞாயிறன்று கூடிய நம் சமாஜக் செயற்குழு கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம் வருமாறு:

மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் கட்டளையாக சமாஜத்தின் பெயரில் தவணை வைப்பு நிதியில் ரூ 750 இருக்கிறது. இக்கட்டளை நிதியை ரூ 1000 ஆகப் பெருக்குவதற்கு திரு. கொ. நீ. சிங்கார வேலு முதலியார் அவர்கள் நன்கொடையாக ரூ. 250 கொடுத்துள்ளார். இக்

நன்கொடையை இச் செயற்குழு ஏற்றுக்கொள்கிறது. 27-2-66ல் நடந்த செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானப்படி இக்கட்டளை "திரு கா. இராமநாதன் செட்டியார் நினைவுக் கட்டளை" என்று பெயர் பெறும். இந்நிதியிலிருந்து வரும் வட்டிப்பணத்தைப் பின்வருமாறு பயன்படுத்தவேண்டு மென்று இச்செயற்குழு தீர்மானிக்கிறது :

"திரு மெய்கண்டார் திருநாளைச் சிறந்த முறையில் கொண்டாட வேண்டும். அத்திருநாளை ஒட்டி சைவ சித்தாந்தத்தில் தேர்ச்சி பெற்றவர்களைக்கொண்டு குறைந்தது மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து சைவசித்தாந்தச் சொற்பொழிவுகள் நடத்த வேண்டும். இச்சொற்பொழிவுகள் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் இருக்கலாம். இவை அமைதியான நிலையிலுள்ள கட்டடத்தில் நடைபெற வேண்டும். இச் சொற்பொழிவுகளை அச்சிட்டு விலைக்கோ இலவசமாகவோ வழங்க வேண்டும். இச்செலவினங்களுக்கு இக்கட்டளையின் வட்டிப் பணம் போதவில்லையானால் மலேயா சிறப்பு மாநாட்டுச் சமயக் கட்டளையிலிருந்து வரும் வட்டிப்பணத்தையும் சேர்த்து இவ்விரண்டு கட்டளைகளின் பெயரால் இச்சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யலாம்"

ஓர் அறிவிப்பு

1968 டிசம்பர் 27, 28, 29 வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 63ஆம் ஆண்டு விழா திருமயிலாப்பூரில் மிகச் சிறப்புற நிகழும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். பிற செய்திகள் அடுத்த இதழில் காண்க;

ஆண்டு விழாவில் தீர்மானங்கள் கொண்டுவர விரும்பும் அன்பர்கள் அவற்றினை 15-12-68க்குள் சமாஜச் செயலாளர் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப் பெறுகிறது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

(தொடக்கம் - 1905 — பதிவு - 1915)

63ஆம் ஆண்டு விழா, திருமயிலாப்பூர்

அழைப்பும் அறிவிப்பும்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

கல்லாடை புனைந்தருளுங் காபாலியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

அன்புடையீர் !

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் **63 - ஆம் ஆண்டு நிறைவுவிழா**வும், பொதுக்கூட்டமும், அதன் அங்கமாகச் **சைவர், சைவமங்கையர், சைவ இளைஞர் மாநாடு**களும், 27, 28, 29-12-68 ஆகிய வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், திருமயிலாப்பூர் கற்பகாம்பாள் கபாலீச்சுரர் திருக்கல்யாண மண்டபத்தில் பிற்காணும் நிகழ்ச்சி நிரலில் கண்டாங்கு முறைப்படி நிகழும்.

திருவாசகமணி - உயர்திரு. கெ. எம். பால சுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்., அவர்கள் சைவர் மாநாட்டிற்கும், டாக்டர் திருமதி. தாரா நடராஜன், எம். பி., பி. எஸ். அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டிற்கும், உயர்திரு. கெ. இ. அருணாசல முதலியார், எம். ஏ., பி. காம். அவர்கள் சைவ இளைஞர் மாநாட்டிற்கும தலைமைவகிப்பார்கள்.

சித்தாந்த சைவம்பற்றி அறிஞர்கள் பலர் சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள். இடை இடையே மாநாட்டு நிகழ்ச்சிகளின்போது திருமுறை ஓதப் பெறும்.

அன்பர்கள் அனைவரும் உறுப்பினரும் வந்து கேட்டு விழாவைச் சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்குச் சமாஜ உறுப்பினர்கள் அனைவரும் வருமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

சமாஜத்தினர் :

தலைவர் : வித்துவான் - கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு).

துணைத்தலைவர்கள் :

பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம். ஏ., எல். டி.

கு. வரதராச பிள்ளை, பி. ஏ.

செயலாளர் : மு. நாராயணசாமி முதலியார்.

வரவேற்புக் குழுவினர் :

தலைவர் : அய்யா. சுப்பிரமணிய முதலியார்

துணைத்தலைவர்கள் :

அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.

கே. இ. அருணசலம், எம். ஏ., பி. காம்.

ஆர். மாசிலாமணி முதலியார், மேயர் கம்பெனி.

செயலாளர் - பொருளாளர் :

P. M. நாயனுர், டி. காம்.

ஏனைய உறுப்பினர் :

'பத்ம பூஷண்' - டி. எஸ். இராமசாமி ஐயர், பி. எ., பி. எல்.

கே. கமலக்கண்ண முதலியார்

பம்மல் - ச. வரதராஜ முதலியார்

ப. சை. அண்ணமலை முதலியார்

பி. ஜி. நடராஜ முதலியார், ஜெ. பி.

இரத்தினவேலு செட்டியார்

தட்சிணமூர்த்தி நாயக்கர்

அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.

விசுவநாத குருக்கள்

ச. நடேச முதலியார்

எஸ். சுந்தரம்

எம். சிவராமன், பி. எ.

ஆ. கன்னியப்பன்

நிகழ்ச்சி நிரல்

(27—12—'68) வெள்ளிக்கிழமை

காலை 8 மணி: கபாலீச்சுரர் கற்பகாம்பாள் வழிபாடும் ஊர்வலமும்.

காலை 9 முதல் 1 மணி வரை - **சைவர் மாநாடு**

இறைவணக்கம்.

கொடியேற்றம்: திரு. ஆ. இராதாகிருஷ்ணன், எம். ஏ., பி. எல்., இந்து சமய அறநிலைய ஆணையாளர்.

வாழ்த்துரை:

சைவப் பெரியார் - திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

பத்ம பூஷணம் - திரு. டி. எஸ். இராமசுவாமி ஐயர் பி. ஏ., பி. எல்.

வரவேற்புரை: திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார்.

திறப்புரை: தவத்திரு. குன்றக்குடி அடிகளார்.

படத்திறப்பு: அருள்திரு. ஞானியார் அடிகளார் திருவுருவப் படம் - ராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார், பி. ஏ.

" அருள்திரு. மறைமலையடிகள் திருவுருவப் படம் - திரு. தி. சி. இராமலிங்கம், எம். ஏ., பி. எல்., அரசுச் செயலாளர், சட்டத்துறை.

ஆண்டு அறிக்கை: திரு. க. வடிவேலாயுதம், எம். ஏ.

வாழ்த்துச்செய்திகள் படித்தல்: திரு. கொ. நீ. சிங்காரவேலு, எம். ஏ.

தலைமையுரை: திருவாசகமணி - **கெ. எம். பாலசுப்பிரமணியம்.**

மாலை 4 முதல் 8 மணி வரை - **சைவர் மாநாடு**

இறைவணக்கம். தலைவர் முன்னுரை.

மலர்வெளியீடு : மாண்புமிகு திரு. ஆர். சதாசிவம், பி.ஏ., பி. எல்., உயர் மன்ற நீதிபதி.

நூல்வெளியீடு : "திருவாசகம்" - திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம். ஏ.

,, "Gospel of Saivism" - M. Shyamdas, Chief Presidency Magistrate.

சொற்பொழிவுகள் :

1. திரு. பெ. திருஞானசம்பந்தம், எம். ஏ., எல். டி.
—Sources of Saivism.

2. டாக்டர் - திரு. வ. ஆ. தேவசேனபதி, எம். ஏ., பி. எச்டி.
—Contribution of Saiva Siddhanta to Indian heritage

3. அகிலன் —**அறநெறியும் நடைமுறையும்**

4. அர்ச்சுனன், பி. ஏ., செயலாளர், தமிழ்நாடு தெய்வீகப் பேரவை.
—**சைவ சித்தாந்தத் தத்துவ விளக்கம்**

தலைவர் முடிவுரை, வாழ்த்து.

(28—12—'68) சனிக்கிழமை

காலை 8 மணி : திருக்கோயில் வழிபாடும், ஊர்வலமும்.

காலை 9 முதல் 1 மணி வரை - **சைவ மங்கையர் மாநாடு**

இறைவணக்கம்.

வாழ்த்துரை : திருமதி. கு. திரிபுரசுந்தரி அம்மையார் (மறைமலையடிகளார் திருமகளார்)

தலைமையுரை : டாக்டர் - தாரா நடராசன் அம்மையார், எம். பி., பி. எஸ்.

சொற்பொழிவுகள் :

1. *திருமதி. சாரதாம்பாள் நம்பியாரூரன், எம். ஏ.*
—கண்ணப்பர் கனிவு

2. *திருமதி. புனிதவதி இளங்கோவன், எம். ஏ.*
—தொண்டுக்குத் தொண்டு

3. *திருமதி. ஜயகுமாரி பாஸ்கரன்*
—திருவள்ளுவரும் திருத்தொண்டரும்

பிற்பகல் 2-30 முதல் 4-30 மணி வரை

இடம் : *கல்யாண மண்டபம், எண் 16, தெற்கு மாடவீதி.*

சமாஜ உறுப்பினர் ஆண்டுப் பொதுக்கூட்டம், சமாஜ அலுவலர்கள் தேர்வு முதலியன.

மாலை 5 முதல் 8 மணி வரை - சைவர் மாநாடு

இறைவணக்கம், தலைவர் முன்னுரை.

சொற்பொழிவுகள் :

1. பேராசிரியர் - வித்துவான்-பாலூர் - கண்ணப்ப முதலியார், எம். ஏ., பி. ஓ. எல்.
—சேக்கிழார் ஒரு பல்கலைக் குரிசில்

2. பேராசிரியர் - அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம். லிட்.
—மரணமிலாப் பெருவாழ்வு

3. திரு. மு. அருணைசலம், எம். ஏ., ஆசிரியர் "சித்தாந்தம்"
—சிவ ஆகமங்கள்

தலைவர் முடிவுரை, வாழ்த்து.

இரவு 8 முதல் 9-30 மணி வரை

நாடகக் கலைநிகழ்ச்சி: "அங்கம் பூம்பாவை" - திரு. எஸ். வி. சிட்டிபாபு, எம். ஏ., எல். டி., (இணை இயக்குநர், கல்வித்துறை) தலைமையில் கபாலீச்சுரர் தேவார பாடசாலை மாணவர்களால் நடத்தப்பெறும்.

(29—12—'68) ஞாயிற்றுக்கிழமை

காலை 8 மணி: திருக்கோயில் வழிபாடும் ஊர்வலமும்.

காலை 9 முதல் 1 மணிவரை - **சைவ இளைஞர் மாநாடு**

இறைவணக்கம்.

வாழ்த்துரை: திரு. கீ. இராமலிங்கனார், எம். ஏ.

திறப்புரை: பத்மபூஷண் - பெரியசாமி தூரன்

தலைமையுரை: திரு. கே. இ. அருணாசலம், எம். ஏ., பி.காம்.

சொற்பொழிவுகள்:

1. திரு. வெ. தெ. துரைராஜ், ஐ. ஏ. எஸ்.
   —சிவநெறி
2. திரு. சு. மாரிமுத்து, பி. ஏ.
   —சைவ சமயமே சமயம்
3. சைவச்செங்கதிர் - வித்துவான்-இராச செல்வக் கணபதி.
   —ஒரு பெரும் நெறி
4. ஔவை து. நடராஜன், எம். ஏ., எம். லிட்.
   —திருவள்ளுவப் பயன்

பிற்பகல் 2-30 முதல் 4-30 வரை - **யோகப் பயிற்சி**

இடம்: கல்யாணமண்டபம், எண் 16, தெற்கு மாட வீதி,

நிகழ்த்துபவர்: சிவயோகி இரத்தினசபாபதி பிள்ளை, திருவாரூர்

மாலை 5 முதல் 8 மணிவரை - சைவர் மாநாடு

இறைவணக்கம், தலைவர் முன்னுரை.

சொற்பொழிவுகள் :

1. திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம். ஓ. எல்., ஆசிரியர், "திருக்கோயில்."
—திருஞானசம்பந்தரின் சிறப்பியல்புகள்

2. வித்துவான் - க. வெள்ளைவாரணனார், அண்ணாமலை நகர்.
—இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும்

3. சித்தாந்தக் கலைச்செல்வர் - திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி., காஞ்சிபுரம்.
—உண்மை விளக்கம்

தலைவர் முடிவுரை.

நன்றியுரை : வித்துவான் — திரு. அம்பை சங்கரன்.

வாழ்த்து

குறிப்பு :—(1) மாநாட்டில் சமாஜ வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும். சமாஜ உறுப்பினர் கட்டணமும், ஆங்கில முத்திங்கள் இதழ் கட்டணமும் மாநாட்டில் செலுத்தலாம். (2) சமாஜ உறுப்பினர்களுக்கு உண்டி, உறையுள் வசதிகள் செய்து தரப்பெறும். முன்னரே தங்கள் வரவினை சமாஜச் செயலாளருக்குத் தெரிவிக்கவும். சமாஜ உறுப்பினரல்லாதார் உணவுவசதி தேவையானால் ரூ. 10/– செலுத்த வேண்டும்.

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14